தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1971 ஜூன் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று முன் தினம் தள்ளி வைக்கப்பட்ட கேள்விகள், இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு நிலவள வங்கி.

* 1. **வினா—திரு. என். எஸ். பலராமன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரிப்பாக்கம் பஞ்சாயத்து யூனியனில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலவள வங்கி எப்பொழுது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கத்தில் நிலவள வங்கியின் கிளையொன்று இந்த ஆண்டு திறக்கப்பட இருக்கிறது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கத்தில் மட்டுமல்லாமல், வாலாஜா தாலுக்காவில் இருக்கும் எந்த ஒன்றியத்திலும் நிலவள வங்கி துவக்கப்படவில்லை என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா ? அங்கு எப்பொழுது துவங்கப்படும் என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : என்னிடமிருக்கும் தகவல்படி, காவேரிப்பாக்கம் என்பது அரக்கோணம் தாலுக்காவில் இருப்பதாகத் தெரிகிறது.

இப்பொழுது 151 பிளாக்குகளில் நிலவள வங்கிகள் திறக்கும்படியாக அரசு ஆணையிட்டிருக்கிறது. அவற்றில் எத்தனை இந்த ஆண்டில் திறக்க முடியுமோ அத்தனையும் திறக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : நிலவள வங்கிகளே இல்லாத பஞ்சாயத்து ஏரியாக்களில் இந்த ஆண்டு எத்தனை நிலவள வங்கிகளைத் திறக்க அரசு ஆலோசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, மொத்தம் 151 பிளாக்குகளில் நிலவள வங்கிகள் இல்லை. 223 பிளாக்குகளில் இருக்கின்றன; அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நிலவள வங்கிகள் இல்லாத 151 பிளாக்குகளில், ஒவ்வொன்ருகத் திறக்கும்படியாக அரசு ஆணையிட்டிருக்கிறது. எப்படி எப்படித் திறக்கவேண்டும் என்பதற்கெல்லாம் குறிப்புகள் இருக்கின்றன. எப்பொழுது தொடர்ந்து செயல்பட முடியுமோ அப்பொழுது திறக்கப்படும்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : மதுரை மாவட்டத்தில் ஆத்தூர் தொகுதியில் ஆத்தூர் பிளாக்கில் நிலவள வங்கி இல்லாத காரணத்தால் நிலவள வங்கி இந்த ஆண்டு திறக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஆத்தூரும் இந்தப் பட்டியலில் இருக்கிறது.

திரு. க. மு. இராசகோபால் : வடார்க்காடு மாவட்டத்தில் வந்தவாசியில் நிலவள வங்கி யொன்றை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் இன்னும் 16 பிளாக்குகளில் நிலவள வங்கிகள் திறக்கப்படவில்லை. அவைகளை ஒவ்வொன்ருகத் திறக்கும்படியாக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, இன்னும் ஓராண்டுக்குள்ளாக எல்லா ஒன்றியங்களிலும் நிலவள வங்கிகள் திறக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சென்ற ஆண்டே சொன்னர்கள். உடனடியாக நிலவள வங்கிகளைத் திறக்க இயலாமல் போனாலும், அதனுடைய கிளை வங்கிகளையாவது திறக்க அமைச்சர் அவர்கள் உடனடியாக ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஆறு பிளாக்குகளைத் தவிர மற்ற எல்லா பிளாக்குகளிலும் இந்த ஆண்டே வங்கிகள் திறக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகளில் ஒரு தொகுதியில் மூன்று நிலவள வங்கிகள் இருக்க, ஒரு தொகுதியில் நிலவள வங்கியே இல்லாமலிருப்பது, பல தொகுதி மக்களுக்குச் சங்கடத்தை விளைவிக்கிறது. ஆகவே, எல்லாத் தொகுதிகளிலும் ஒவ்வொரு நிலவள வங்கியையாவது ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, வரிசைக்கிரமப்படி திறப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர்களுடைய தொகுதியிலும் நிலவள வங்கிகள் திறக்கப்படும் என்று நான் உறுதியாகச் சொல்ல முடியும்.

1971 ஜூன் 23]

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் நிலவள வங்கி தொடங்குவதற்கான உத்தரவு கடந்த ஆண்டே போடப்பட்டு ஏதாவது ரத்து செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அல்ல. அரசாணை பிறப்பிக்கப்பட்டது 21—6—1971 அன்று. அதாவது, இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டெல்லாம் இனிமேல்தான் நிறைவேற்றப்பட வேண்டும். சென்ற ஆண்டு இதைப்பற்றி அரசு ஆணை எதுவும் பிறப்பிக்கவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : உடனடியாகத் திறக்கப்படவிருக்கும் நிலவள வங்கிகளின் பட்டியலில் சிங்காநல்லூர் தொகுதியிலுள்ள சர்க்கார்—சாமக்குளம் பஞ்சாயத்து ஒன்றியம் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, அது உடனடியாகத் திறக்கப்படுமா என்பதை என்னால் உடனடியாகச் சொல்ல முடியாது. 'பட்டியலில் இருக்கிறது' என்றுதான் என்னால் சொல்ல முடியும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இந்த நிலவள வங்கிகளுக்கு விவசாயிகள் கடனுக்காக விண்ணப்பம் செய்யும் போது, இந்த நிலவள வங்கிகளே விவசாயிகளுக்குத் தேவையான என்கம்பரன்ஸ் சர்ட்டிபிகேட்டையும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அதேபோல், கணக்கப்பிள்ளை, மணியக்காரர்களிடமிருந்து சிட்டா, அடங்கல்களையும் அந்த நிலவள வங்கிகளே எடுத்துக் கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : என்கம்பரன்ஸ் சர்ட்டிபிகேட்டை வாங்க அங்குள்ள வி.எல்.ஆர். என்னும் அரசு அலுவலர் நிச்சயமாக உதவி செய்வார் என்று கருதுகிறேன். அப்படி உதவி செய்யாமலிருந்தால் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. ஏ. எம். இராஜா : என்கம்பரன்ஸ் சர்டிபிகேட்டைப் பொறுத்த வரையில், விவசாயிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு, நிலவள வங்கி அதிகாரிகளே எடுத்துக் கொள்ளுகிறார்கள். அதேபோல், கணக்குப்பிள்ளை. மணியக்காரரிடமிருந்து சிட்டா-அடங்கல் நகல் போன்றவைகளையும் நிலவள வங்கிகளே எடுத்துக் கொள்ளுவதற்கு எல்லாவித முயற்சிகளும் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சிட்டா-அடங்கலும் வங்கியிலுள்ள அதிகாரிகளோ அரசாங்க அதிகாரிகளோ எடுத்துக் கொள்ளுவதாக இருந்தால் விரைவிலே கடன்களை விவசாயிகள் பெறமுடியும் என்பதை நான் உணருகிறேன். இதற்கான காரியங்களை விரைவிலே செய்து முடிக்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is a great demand for land development banks everywhere. The demand is greater in backward areas in districts like Dharmapuri. May I know from the Hon. Minister whether he will give special consideration to Dharmapuri district in the matter of opening land development banks?

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் : தர்மபுரி மாவட்டத்தில் தல்லி, கிழமங்கலம், சூளகிரி, பர்கூர் வேப்பனப்பள்ளி, காவேரிப் பட்டணம், பென்னகரம், நல்லம்பள்ளி, மூரப்பூர் பாப்பிரெட்டி பட்டி ஆகிய இடங்களில் திறக்கப்பட இருக்கின்றன.

திரு. அ. ஆறுமுகம் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது 6 வட்டாரங்களைத் தவிர மற்ற எல்லா ஒன்றியங்களிலும் அமைக்கப்படும் என்று சொன்னார்கள், அந்த ஆறு வட்டாரங்கள் என்ன, என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அந்த வட்டாரங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்றன என்று வருத்தத் தோடு சொல்ல விரும்புகிறேன். அங்குள்ள நிலவள வங்கிகள் நட்டத் தில் போகின்றன. ஆகவே இந்த ஆண்டில் இல்லாது பின்னால் அவற்றை எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டிருக் கிறது.

திரு. ஏ. க. துரைசாமி : வடாற்காடு மாவட்டத்தில் 16 இடங் களில் நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதில் குடியாத்தம் இடம்பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குடியாத்தத்தில் ஏற்கனவே ஒரு நிலவள வங்கியிருந்து, முற்காலத்திலிருந்தே அது செயல்பட்டு வருகிறது.

திரு. ந. முத்துவேல் : திண்டிவனம் நகராட்சியில் உள்ள நிலவள வங்கியை ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றி அமைக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது நிலவள வங்கி மனைவள வங்கியில்லை ஆகையால் பெரும்பாலும் ஊராட்சி ஒன்றியப் பகுதியில்தான் அமைக்கப்பட்டு வருகின்றன.

வேலூரில் உள்ள பழம் பதனிடும் தொழிற்சாலை

*** 12 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வேலூரில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்ட பழம் பதனிடும் தொழிற்சாலை தற்போது செயல்படுகிறதா ?

(இ) இல்லை எனில், காரணம் என்ன ?